மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 18 சதவீத இட ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்கிற தகவலை உயர்நீதி மன்றம் அளித்து இருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். பொதுவாகவே இப்படிப்பட்ட கேள்வி எழுகிறபோது ஒவ்வொரு துறையினரும் அந்தத் துறையிலே இருக்கிற ஸ்கேவெஞ்சர்ஸ் வாட்ச்மென் பியூன்ஸ் இவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு 18 சதவீதம் நிரப்பப்பட்டுவிட்டது என்கிற கணக்கைச் சொல்லுகிறார்கள். கிளாஸ் 1 ஆபீசர்ஸ்; கிளாஸ் 2 ஆபீசர்ஸ் என்று தரவாரியாக இட ஒதுக்கீடு செய்யப்படுவதுதான் முறையான ஒதுக்கீடாக இருக்கும்.

முற்பகல் 10—10.

எனவே இத்தகைய விவரங்களைத் தந்து விட்டு ''நிரப்பப்பட்டுவிட்டது'' என்று சொல்வது சரியான விவரமாக இருக்காது. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையிலே ரெஜிஸ்ட்ரார். அசிஸ்டெண்ட் ரெஜிஸ்ட்ரார் டெபுடி ரெஜிஸ்ட்ரார் என்று 15 உயர் பதவிகள் இருக்கின்றன. இந்த 15 உயர் பதவிகளிலும் ஒரு தாழ்த்தப்பட்டவர் கூட இல்லை. அதற்கு அடுத்துள்ள அமைச்சுப் பணியிலும் அதே நிலைமை இருக்கிறது. எனவே அந்த பேக்லாக்ஸ்-ஐயாவது- நிலுவை என்று சொல்லப்படுகிற அந்த பேக்லாக்ஸ்-ஐ மீண்டும் நிரப்பிட அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு தமிழரசன் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை வைத்து உயர்நீதிமன்றத்திற்கு எழுதித்தகவல் அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 123, திரு. வி. கே. லட்சுமணன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

123—

அங்கீகரிக்கப்படாத மனைகள் விற்பனை.

* 9714—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அங்கீகரிக்கப்படாத மனைகள் விற்பனைக்கு வந்தால் அவைகளைப் பதிவு செய்யாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. கே. லட்சுமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தமிழ்நாட்டிலே பல்வேறு மாநகராட்சிகளிலே அங்கீ கரிக்கப்படாத லே-அவுட்களிலே உருவாகின்ற மனைக்கட்டு களுக்கு மாநகராட்சிகள் எந்த விதமான அடிப்படை வசதியை யும் செய்து தருவது இல்லை. அப்பாவி மக்கள் இந்த அங்கீ கரிக்கப்படாத லே-அவுட்களிலே குறைந்த விலைக்கு மனைக் கட்டுகளை வாங்கி, எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் துன்புற்று வருகிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அங்கீகரிக்கப்பட்ட லே-அவுட்களிலே மனைக்கட்டு வாங்கப்பட்டால் தான் அது பதிவு செய்யப்படும் என்ற நிலை உருவாகும் என்று சொன்னால், சார்-பதிவாளர் அலுவலக மட் டத்திலே நாம் இதைத் தடுத்து விடலாம். உருவாகின்ற எல்லா மனைக் கட்டுகளிலும் நகர் அமைப்புச் சட்டத்திற்கு உட் பட்டதாக, சகல வசதிகளும் கூடியதாக இருக்கும் என்பதைக் கருத்திலே கொண்டு இதை உடனடியாக அமல்படுத்த அரசு முன்வருமா என்று உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப் பதிவு செய்வதற் காக வருகிற மனைப் பிரிவு சம்பந்தப்பட்ட ஆவணத்திற்கு வந்தால், பதிவு செய்வதற்கு முன்பு ஆவணங்களைப் பதிவு செய்யாமல் நிலுவையில் வைத்து, சம்பந்தப்பட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கு அவைகள் தெரிவிக்கப்படுகின்றன. அதிலே உங்களுக்கு ஏதாவது மறுப்புகள் இருக்கிறதா என்று கேட்கப்படுகிறது. 15 நாட்கள் நேரம் கொடுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு அது மறுக்கப்படுமானால் ''அது மறுக்கப்படுகிறது'' என்று எழுதி வைக்கப்படுகிறது. மறுக்கப்படவில்லை என்றால் அது பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாத மனைகள் விற்பனைக்கு வந்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்ச ரவர்கள் சொன்னார்கள். இதுவரை அங்கீகரிக்கப்படாத இடங்களை வாங்கி மனைகள் கட்டியவர்கள் நகராட்சி யின் சார்பாக எந்த விதமான நலனையும் பெறாது இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கும் வண்ணம்

இதுவரை அங்கீகரிக்கப்படாத இடங்களிலே மனைகள் கட்டியவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அங்கீகரிக்கப்படுமா என்று அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாதவைகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்தத் துறைக்கு அதிகாரம் இல்லை. அந்தப் படம் அங்கீகரிக்கப்பட்டதா என்று பார்த்து, அங்கீகரிக்கப்பட்டதாக இருந்தால் பதிவு செய்யப்படும். பதிவு செய்யப்படாமலும், அங்கீகரிக்கப்படாமலும் ஆங்காங்கே கட்டிடங்களைக் கட்டினால் அந்தக் கட்டிடம் ஊராட்சியிலே கட்டினால், மாநகராட்சியிலே கட்டினால் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதற்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாத மனைகளைப் பொறுத்த மட்டில் அமைச்சர் அவர்கள் இப்பொழுது பதில் சொன்னார்கள். சிலயிடங்கள் புறம்போக்குகள் தனக்குச் சொந்தம் என்று பல பேர் இப்பொழுது பதிவு செய்து விட்டு, பல மோசடி வழக்குகள் வருகின்றனவே, அதைத் தடுப்பதற்காக அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி போடலாம். சரி, அமைச்சர் பதில் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, என்ன செய்வது ? அரசுப் புறம்போக்குச் சொத்தாக இருந்தால் அதை மாமியார் வீட்டுச் சொத்தாகப் பலர் எண்ணிக் கொள்கிறார்கள். (சிரிப்பு) அப்படி அரசுச் சொத்துக்களை மாமியார் வீட்டுச் சொத்துக்களாக எண்ணி அவர்கள் கேள்வி முறை இல்லாமல் அதிலே புகுந்து விடுகிறார்கள். அப்படிப் புகுந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். எங்கெங்கே அப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு இருக்கிறது என்பதைப் பார்த்து அவர்களை வெளியேற்றுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் அரசு எடுக்கும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124, திரு. பி. வி. இரராஜேந்திரன், இருக்கையில் இல்லை. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.